

தற்போதைய சவால்களுக்கு மிகவும் திறம்பட முகங்கொடுப்பதற்காக, மூலோபாயத்தின் மூன்று தூண்களான பல்வகைப்படுத்தல், வேறுபாடு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை நாம் தீவிரமாகப் பின்பற்றினோம். இதன் விளைவாக, 2023/24 காலப்பகுதியில் ஏழு மூலோபாய முன்னுரிமைகளை நாம் இனங்கண்டுள்ளோம். எமது இடைக் காலம் முதல் நீண்ட காலம் வரையான திட்டமிடலில், கவனத்தின் மையமாக அவை செயல்படும்.

மற்றுமொரு நிதியாண்டை நாம் நிறைவு செய்கையில் எமது பங்குதாரர்கள் மற்றும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் இச்செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆண்டு சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் நிறைந்த ஆண்டாக அமைந்தது. வணிக உணர்வு மற்றும் இலாபத்தைப் பாதிக்கும் வகையில் காற்று எதிர்த்திசையில் வீசியிருப்பினும், எமது வணிகத் துறை, பூகோளவியல் பிரசன்னம், இயல்பான வளர்ச்சி மற்றும் 'விருப்பத்திற்குரிய கூட்டாளர்' ஆக இருப்பதில் நாம் வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டுள்ளோம்.

## மகத்தான மாற்றத்திற்கான ஆண்டு

அடுக்கு-1 நிறுவன வளத் திட்டமிடல் கட்டமைப்பான SAP ஐ உள்வாங்கி, 2023/24 ஆம் ஆண்டு DIMO இன் வரலாற்றில் முக்கியமான சாதனை படைத்த ஆண்டாக அமைந்தது. ஏழு வணிகத் துறைகளில் இயங்குகின்ற பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்கள் குழுமம் என்ற ரீதியில் இந்த டிஜிட்டல் மாற்றத்தை திட்டமிட்டு, நிறைவேற்றுவது மிகவும் சிக்கலான ஒரு பணியாக அமைந்ததுடன், கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகள் எடுத்தன. 2023 டிசம்பரில் புதிய தொழில்நுட்பத்தை நாம் வெற்றிகரமாக செயல்படுத்தினோம். எமது செயல்பாட்டு திறன்களை மேம்படுத்தியவாறு, எட்டு தொழில்நுட்பவியல் அலகுகள் அடங்கலாக 45 அலகுகளை நாம் தற்போது ஒருங்கிணைத்துள்ளோம். "Project Genesis " செயற்திட்டத்திற்காக உழைத்த சபைகளின் அர்ப்பணிப்புடனான முயற்சிகளின்றி இது சாத்தியமாகியிராது. இச்செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டம், 2024/25 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேம்பட்ட முன்கணிப்பு திறன்களை அறிமுகப்படுத்துவதே நோக்கமாகும்.

## சூறாவளியைக் கடந்து செல்லல்

2023/24 நிதியாண்டு, DIMO க்கு கணிசமான நிதியியல் சவால்களை விடுத்திருந்தது. தற்போது நான்காவது ஆண்டாகவும் தொடர்கின்ற வாகன இறக்குமதித் தடை எமது வருமான மார்க்கத்தை வெகுவாகப் பாதித்தது. ஏனெனில், வரலாற்றுரீதியாக வாகனங்கள் எமக்கு பாரிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற வணிகப் பிரிவாக காணப்பட்டது. கட்டுமானத் துறையின் மந்தகதி எமது குடிசார் கட்டுமானம் மற்றும் கட்டட சேவைகளின் துறைகளிலும், எமது கட்டுமான இயந்திரங்கள் வணிகத்திலும் கணிசமான அளவில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது.

நுகர்வோர் மத்தியில் கொள்வனவு வலுவிழப்பு காரணமாக சில்லறை வியாபாரத் துறையும் தத்தளித்தது.

விவசாயம் மற்றும் மோட்டார் வாகன பொறியியல் தீர்வுகள் துறைகள் நேர்மறை பங்களிப்புக்களை வழங்கியுள்ளதுடன், ஏனைய துறைகளில் காணப்பட்ட சவால்களுக்கு இது சற்று ஆறுதலை வழங்கியதுடன், அதனால் இந்த ஆண்டின் சவால்களின் ஒட்டுமொத்த விளைவை தணிவிக்க உதவியுள்ளது.

வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 183 மில்லியனாக குறைவடைந்துள்ளதுடன், (2022/23 - ரூபா 737 மில்லியன்)  சமீபத்தைய முதலீடுகளுக்காக பெற்ற கடன்களுடன் தொடர்புபட்ட வட்டிச் செலவின் சுமையும் ஒரு காரணமாகும். நாம் மேற்கொண்டுள்ள முதலீடுகளில் சில நாம் எதிர்பார்த்திருந்த பிரதிபலன்களை எமக்கு தரவில்லை. சில்லறை வியாபாரப் பிரிவும் எந்த வகையிலும் எமது எதிர்பார்ப்பினை எட்டாத அளவுக்கு மோசமாக காணப்பட்டதுடன், வாகன இறக்குமதி படிப்படியாக ஆரம்பிக்குமென நாம் காத்திருக்கின்றோம்.

## மூலோபாய பிரதிபலிப்புக்கள்

தற்போதைய சவால்களுக்கு திறன்மிக்க வழியில் தீர்வு காண்பதற்காக, பல்வகைப்படுத்தல், வேறுபாடு மற்றும் ஒத்துழைப்பு ஆகிய எமது மூன்று மூலோபாயத் தூண்களை நாம் தீவிரமாக பின்பற்றினோம். இதன் விளைவாக 2023/24 இல் ஏழு மூலோபாய முன்னுரிமைகளை நாம் இனங்கண்டதுடன், எமது இடை முதல் நீண்ட கால அடிப்படையிலான திட்டமிடலில் கவனத்தின் மையமாக அவை காணப்படும்.

நெகிழ்தன்மை கொண்ட தயாரிப்பு வரிசையை கட்டியெழுப்புதல், இயல்பான வளர்ச்சியை அடைதல் மற்றும் விருப்பத்திற்குரிய கூட்டாளராக மாறுதல் ஆகிய எமது மூன்று மூலோபாய இலட்சியங்கள் மீது நாம் இந்த ஆண்டு முழுவதும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டோம். சவால்மிக்க காலகட்டங்களில் கூட போட்டியாளர்களை விடவும் முன்னிலையில் திகழ்வதற்கு இக்கவனம் எமக்கு உதவியுள்ளது.

## உலகளாவிய வாய்ப்புக்களை ஆராய்தல்

எமது விஸ்தரிப்பு மூலோபாயம் மற்றும் உள்நாட்டு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை தணிவித்தல் ஆகியவற்றின் அங்கமாக, இலங்கைக்கு வெளியிலும் வணிக வளர்ச்சியை நாம் முன்னெடுத்துள்ளோம். அதன் விளைவாக உள்நாட்டில் பொருத்தப்பட்ட பொழுதுபோக்கு வாகனங்களை அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வணிகமொன்றுக்கான ஆரம்பகட்ட பணிகளை மேற்கொண்டுள்ளோம்.

இதை விட, 2023 ஜுலை முதல் ஐரோப்பிய சந்தை மீது கவனம் செலுத்தி, சேதன, தாவர அடிப்படையிலான உணவுகள் மற்றும் தேங்காய் தயாரிப்புக்களில் நிபுணத்துவம் பெற்ற "Miditer" என்ற எமது சொந்த ஏற்றுமதி வர்த்தகநாமத்தை தீவிரமாக ஊக்குவித்து வருகின்றோம். உலகளாவில் நீண்ட கால அடிப்படையில் வாடிக்கையாளர் உறவுமுறைகளை ஸ்தாபிப்பதில் எமது தற்போதைய முயற்சிகள் கவனம் செலுத்தியுள்ளன.

### மூலோபாயத்தைப் பாதுகாத்தல்: வாய்ப்புக்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்திக் கொள்ளல்

“கனவுகளுக்கும், அபிலாஷைகளுக்கும் உந்துசக்தியளித்தல்” என்பதன் மீதான எமது அர்ப்பணிப்பு, வலுவான நிறுவன ஆட்சி, ஆபத்து மற்றும் வாய்ப்பு முகாமைத்துவ நடைமுறைகளுடன் வலுவாக நங்கூரமிட்டுள்ளது. இந்த கட்டமைப்புக்களில் நிறுவன ஆட்சி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு ஆட்சி ஆகியன உள்ளடங்குவதுடன், நாம் செயல்படும் அளவுருக்களை இவை வரையறை செய்கின்றன. மேலும், கொள்கைள், கட்டமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள் DIMO இன் விழுமியங்களுடன் ஒன்றியதாக அமையும் வகையில், அனைத்திலும் நிலையான முகாமைத்துவத்தை நாம் உறுதி செய்கின்றோம். ஆபத்துக்களை இனங்காணும் எமது பொறிமுறைகள் பணிப்பாளர் சபை முதல் தொழிற்பாட்டு மட்டங்கள் வரை பரவியுள்ளதுடன், எவ்விதமான சவால்களுக்கும் முற்கூட்டியே தீர்வு காண்பதற்கு எமக்கு வலுவூட்டுகின்றன. மேலும் வாய்ப்புக்களை நாம் திறமையான முறையில் கையாள்வது, சவால்மிக்க காலகட்டங்களிலும் DIMO இன் நெகிழ்திறனை வலுப்படுத்துவதில் முக்கியமாக உள்ளது.

### வாடிக்கையாளர் அனுபவத்தை வளப்படுத்த, ஊழியர் அனுபவத்தை மேம்படுத்தல்

எமது வர்த்தகநாமத்திற்காக வாதிடுகின்ற அர்ப்பணிப்புமிக்க வாடிக்கையாளரை அவர்களுடைய ஒப்பற்ற அனுபவங்கள் மூலமாக வளர்ப்பது குறுகிய-இடைக் காலத்திற்கான எமது முதன்மையான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த இலக்கானது எமது பணியாளர்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் அவர்களைத் திருப்திப்படுத்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டது என்பதை நாம் இனங்கண்டுள்ளதுடன், ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான எமது முயற்சிகளை நாம் தீவிரப்படுத்தியுள்ளோம். செயல்பாட்டு திறன்களை மேம்படுத்தும் நோக்குடன், பிரச்சனையாகவுள்ள விடயங்களை இனங்காண்பதற்காக, வாடிக்கையாளர் பயணங்களை தீவிரமாக ஆராய ஆரம்பித்துள்ளோம்.

### உறுதிமொழிகள்

எமது செயல்பாடுகளின் போது தொடர்புபட்ட அனைத்து தரப்பினர் மத்தியிலும் வெளிப்படைத்தன்மைக்கு DIMO முன்னுரிமையளித்துள்ளதுடன், தொழில்தர்ம தராதரங்களைப் பேணிப் பாதுகாத்து, எவ்விதமான அசட்டைகளுமின்றி வலுவான நடைமுறைகளைப் பேணுவதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

எமது வர்த்தகநாமத்திற்காக வாதிடுகின்ற அர்ப்பணிப்புமிக்க வாடிக்கையாளரை அவர்களுடைய ஒப்பற்ற அனுபவங்கள் மூலமாக வளர்ப்பது குறுகிய-இடைக் காலத்திற்கான எமது முதன்மையான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த இலக்கானது எமது பணியாளர்களில் பெருமளவில் தங்கியுள்ளது என்பதை நாம் இனங்கண்டுள்ளதுடன், ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கான எமது முயற்சிகளை நாம் தீவிரப்படுத்தியுள்ளோம். செயல்பாட்டு திறன்களை மேம்படுத்தும் நோக்குடன், பிரச்சனையாகவுள்ள விடயங்களை இனங்காண்பதற்காக, வாடிக்கையாளர் பயணங்களை தீவிரமாக ஆராய ஆரம்பித்துள்ளோம்.

நிறுவன அறிக்கையிடல் மூலமாக வெளிப்படுத்தும் தகவல் விபரங்களின் துல்லியம் மற்றும் நம்பகம் ஆகியவற்றிலும் எமது அர்ப்பணிப்பு உள்ளது. இந்த ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையில், சட்டரீதியான சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கையுடன் இணைந்து, ‘GRI மற்றும் SASB மற்றும் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வழிகாட்டுதல்கள் - இலங்கை ஆகியவற்றுக்கு இணங்குவதற்கான உறுதிமொழிகளை நாம் பெற்றுள்ளதுடன், ESG பெறுபேற்றுத்திறன் அறிக்கைக்கும் சுயாதீன உறுதிமொழியைப் பெற்றுள்ளோம்.’

### சூழல், சமூகம் மற்றும் நிறுவனம் (ESG)

நிலைபேற்றியல் மீதான எமது அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, சூழல், சமூகம் மற்றும் நிறுவனம் ஆகிய கூறுகளை எமது பிரதான மூலோபாயத்துடன் ஒன்றிக்கச் செய்வதில் நாம் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். ESG கோட்பாடுகள் மீதான எமது நீடித்த அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாக, ‘நிலைபேற்றியல் நிகழ்ச்சிநிரல் 2030’ ஐ நாம் வடிவமைத்துள்ளோம். முக்கிய பெறுபேற்றுத்திறன் குறிகாட்டிகள் மீதான விரிவான விளக்கம் மற்றும் சமூகம், சூழல் மீதான நேர்மறை விளைவை வளர்ப்பதை நோக்கிய எமது பயணம் மற்றும் எமது நிதியியல் வெளிப்பாடுகள் ஆகியவற்றை 131வது பக்கத்தில் கண்டுகொள்ள முடியும்.

### எதிர்கால வாய்ப்புக்கள்

குழுமத்தின் பெறுபேற்றுத்திறன் முகாமைத்துவம், புத்தாக்கம், செயல்பாட்டு மகத்துவம் மற்றும் செலவு நிர்வகிப்பில் விவேகமான வழிமுறைகளை வலியுறுத்தும் வகையில் எமது எதிர்கால பயணம் அமையவுள்ளது. பொருளாதார அழுத்தங்களின் விளைவுகளை தணிவித்து, எமது உலகளாவிய அடிச்சுவட்டை விரிவுபடுத்துவதில் எமது நோக்கமும், கவனமும் அமையும்.

### ஊடாடக்கூடிய எமது ஆண்டறிக்கை குறும் தளம் (Microsite) தொடர்பில் அறிந்து கொள்ளுங்கள்

வெளிப்படைத்தன்மை மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றின் மீது நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக, எமது 2023/24 ஆண்டறிக்கைக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள புதிய குறும்தளத்தை மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம். இந்த ஊடாடும் தளமானது புள்ளி விபரங்களின் காட்சிப்படங்களை ஆராயவும், புள்ளி விபரங்களை உங்களுக்கு வேண்டிய வகையில் அறிக்கைகளாக பதிவிறக்கம் செய்து கொள்ளவும் மற்றும் எமது பயணம் தொடர்பான விரிவான அறிவைப் பெற்றுக்கொள்ளவும் வழிவகுக்கின்றது.

கஹநாத் பண்டிதகே
குழும முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி

18 ஜுன் 2024
கொழும்பு

குழும பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தியை பார்ப்பதற்கு இந்த QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்